(இ) அப்படியானல், அதற்காக எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டது?

(உ) என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டது?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: (a) Yes. 30 overhead tanks are proposed to be constructed in the regions of Virudhachalam and Oomangalam Firkas.

(b) Each of the Panchayat Union concerned will have a total provision of Rs. 4 lakhs which has to be utilised on both link roads formation and rural water supply works.

(c) A sum of Rs. 1,51,000 and Rs. 2,19,000 have been spent so far in Virudhachalam Block and Kammapuram Block respectively for this purpose for the last two years.

*411 கேள்வி.—திரு. கி. நாராயணசாமி பிள்ளை: கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

விருத்தாசலம் பிர்க்கா, ஊமங்கலம் பிர்க்காவில் குடிதண்ணீர் சப்ளைக்காக எத்தனை ஓவர்ஹெட் டாங்குகள் கட்டப்படும்? எப்போது?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: Thirty overhead tanks will be constructed. Period and time of construction of overhead tanks depend on the availability of potable water and the successful working of power drills.

கம்போஸ்டு உரம் (திண்டிவனம்)

*412 கேள்வி.—திரு. ஆ. தங்கவேலு: கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திண்டிவனம் நகராட்சியில் கம்போஸ்டு உரம் தயார் செய்தது கையாடல் செய்திருப்பதாக கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதா?

(இ) ஆமெனில், எத்தனை டன் உரம் கையாடல் செய்யப்பட்டிருக்கிறது?

(உ) இதுவரை யாராவது கைது செய்யப்பட்டிருக்கிறார்களா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: (அ) கையிருப்பு உரத்தில் குறைவு கண்டு பிடிக்கப்பட்டது.

(இ) 385 டன்கள்.

(உ) இல்லை.

திரு. ஆ. தங்கவேலு: கையாடல் செய்யப்பட்ட உரம் 385 டன் அளவுக்கு இருந்தும் இதுவரை அது சம்பந்தப்பட்ட அதிகாரி மீது நடவடிக்கை எடுக்கப்படாததற்குக் காரணம் என்ன?